DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.34/2023**

**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | வசந்தா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சுப்பிரமணியன் | சமயம் | - | |
| கிராமம் | - | சங்கிலிரோடு எஸ்டேட் | வயது | - | 50/2025 |
| சாதி | - | | | | |

**23-09-2025**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு Ecrlmp No 834/2025 -ல் அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எத்தனை வருடமாக சங்கிலிரோடு எஸ்டேட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் கடந்த 30 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். எதிரி தர்மலிங்கம் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவதேதியான 24-05-2023-ம் தேதி நான் எங்குசென்றிருந்தேன் எப்போது வீட்டிற்கு வந்தேன் என்றால் அன்றைய தினம் காலை 8.00 மணியளவில் எஸ்டேட் கூலிவேலைக்கு சென்றுவிட்டு மதியம் 12.00 மணியளவிலிருந்து 01.00 மணி வரை உணவு இடைவேளை என்பதால் வீட்டிற்கு வந்துவிட்டு மறுபடியும் 01.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டேன். மூன்று மணி அளவில் பேக்கரிட்டிக்கு வேலைக்கு செல்பவர்கள் எனது கணவரை எதிரி கத்தியால் குத்திவிட்டதாக சொன்னார்கள். என்னிடம் சொன்னவர் பெயர் என்ன என்றால் முருகன் என்பவர் சொன்னார். போலீசார் என்னை எங்குவைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மறுநாள் காலை 10.00 மணியளவில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் முருகன் எனக்குதகவல் சொன்னதாக சொன்னேனா என்றால் இல்லை. பேக்ட்ரிக்கு சென்றவர்கள் என்று பொதுவாக சொன்னேன். அதற்கு பின்பு என்னை போலீசார்கள் விசாரித்தார்களா என்றால் அடுத்தநாள் சாய்ந்திரம் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுத்தது எனது கணவர் என்றால் சரிதான். நான் சொல்லுவது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் புகார்தாரர் எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. ராஜாராம் என்பவர் எனது உடன்பிறந்த அக்காவின் மகன் என்றால் சரிதான். ராஜாராம்மும் எதிரி தர்மலிங்கமும் பக்கத்து பக்கத்து ஒரே லயனில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். ராஜாராம்வீட்டில் இருந்து கழிவுநீர் சரியாக வெளியேறவில்லை என்று அவர்களுக்குள் பிரச்சனை இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கழிவுநீர் அடைத்துக்கொண்டதாக நிர்வாகத்தில் ராஜாராம் புகார் கொடுத்த

விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொன்னார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. ராஜாராம் எதிரிக்கு எதிராக ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.